DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.99/2018**

Deposition of witness for Prosecution அ.சா.1

| | | |
|---|---|---|
| பெயர் | : | கார்த்திக் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | காசி |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 09.02.2026

எதிரிகள் ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் புளியாலில் வசித்து கடை நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும்.கடந்த 24.05.2018 ம் தேதி மதியம் 1.30 மணியளவில் எங்கள் இடத்தில் 1ம் எதிரியின் தாயார் செல்லம்மாள் குப்பையை கொட்டினார். அதை என் அம்மா ராஜாமணி ஏன் இந்த இடத்தில் குப்பையை கொட்டுகிறீர்கள் என்று கேட்டபோது என் அம்மாவை வாடிபோடி என்று திட்டினார்கள். பின்பு பேசிக்கொண்டிருக்கும்போதே எதிரிகள் வந்து இந்த தேவிடியா மகனை கொன்றால்தான் சரியாக வரும் என்று என்னையும் என் அம்மாவையும் எதிரிகள் இருவரும் தலையிலும் கையிலும் கட்டையாலும், கையாலும் அடித்தார்கள். அதில் எங்களுக்கு காயம் ஆனதால் தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் வந்து புகார் கொடுத்தோம். பின்பு தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். என்னிடம் காண்பிக்கப்டும் புகார் நான் கொடுத்ததுதான், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். (**மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

புகார் மனுவில் விபரங்கள் எழுதியுள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் ஆமாம். புகாரை எந்த இடத்தில் வைத்து எழுதினேன் என்றால் காவல் நிலையத்தில் வைத்துதான் எழுதினேன். புகார் போலீசார் அறிவுறுத்தல் இல்லாமல் நானாகதான் எழுதியதா என்றால் ஆமாம். சம்பவத்தில் பயன்படுத்தியதாக சொல்லப்படும் கட்டையை ஆஜர்படுத்தினேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் சம்பந்தமாக எங்கள் குடும்பத்திற்கும் 1ம் எதிரி குடும்பத்திற்கும் உரிமையியல் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். புகாரை கொடுத்த பிறகுதான் மருத்துவமனைக்கு சென்றேன். புகாரில் சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ள நேரத்தைதான் மருத்துவரிடமும் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். 2018 க்கு முன்பு 1ம் எதிரி குடும்பத்தினர்தான் மேற்படி இடத்தில் விவசாயம் செய்தார்களா என்றால் இல்லை. மேற்படி இடம் தற்போது தரிசாக உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த தேதியில் நான் என் அம்மா, என் மனைவி, என் தாத்தா ஆகியோர் 1ம் எதிரியையும் அவருடைய அம்மாவையும் தாக்கியதாக வழக்கு பதிவு செய்யப்பட்டு போலீசார் விசாரித்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் என் செல்வாக்கை பயன்படுத்தி காவல் துறையில் அந்த வழக்கை பிழையான வழக்காக முடிக்க செய்துள்துள்ளேள் என்றால் சரியல்ல. நான் எதிரி தரப்பினரை தாக்கிவிட்டு எதிரிகள் மீது பொய்யான புகாரை கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் என்னையோ என் தாயாரை கட்டையால் தாக்கவோ, ஆபாசமாக பேசவோ, கைகலால் தாக்கவோ இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னதுபோல் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும் சிவில் வழக்கை மையமாக வைத்து சொத்தை கைப்பற்றுவற்காக தானாக காயத்தை ஏற்படுத்திவிட்டு எதிரிகளை மிரட்டி பணிய வைக்கும் நோக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.99/2018**

Deposition of witness for Prosecution அ.சா.2

| | | |
|---|---|---|
| பெயர் | : | ராஜாமணி |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | காசி |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 09.02.2026

எதிரிகள் ஆஜர் .

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் புளியாலில் வசித்து வருகிறேன். அ.சா.1 என் மகன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 2018ம் வருடம் மே மாதம் ஒரு நாள் என்னுடைய இடத்தில் 1ம் எதிரியின் அம்மா என் இடத்தில் குப்பையை கொட்டினார்கள். நான் இங்கே ஏன் குப்பையை கொட்டுகிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு எதிரிகள் என் மகனை அடித்தார்கள். தேவிடியா மகனே இவனை அடித்து கொல்லுங்கடா என்று சொல்லி அடித்தார்கள் பிறகு என்னையும் கீழே தள்ளி அடித்து மிதித்து காயப்படுத்தினார்கள். பின்பு சிகிச்சைக்காக மருத்துவமனையில் இருந்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனக்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே இடப்பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். நானும் என் மகனும் ஒன்றாகதான்போய் ஏன் குப்பையை கொட்டுகிறீர்கள் என்று கேட்டோமா என்றால் ஆமாம். மேற்படி இடம் சம்பந்தமாக வழக்கு இருக்கும்போது நான் ஏன் போய் கேட்டேன் என்றும் நான் பிரச்சனையை தவிர்த்திருக்கலாம் என்று

சொன்னால் சரியல்ல. நானும் என் மகன் மற்றும் வேலு ஆகியோர் சேர்ந்து 1ம் எதிரியையும், அவர் அம்மாவையும் தாக்கியதாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது பற்றி தெரியுமா என்றால், தெரியும். புகாரை போலீசார் தான் வந்து பார்த்து எழுதினார்கள் அதில் என் மகன் கையெழுத்து போட்டார் என்றால் சரிதான். எதிரிகள் ஆபாசமாகவோ பேசவோ அடிக்கவோ, கொலைமிரட்டல் விடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் மகன் செல்வாக்கை பயன்படுத்தி கொடுத்த பொய்யான புகாருக்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் கொடுத்த புகாரில் எங்களை கைது செய்து விடுவார்கள் என்பதற்காகதான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது பாதியில் தலைமறைவாக ஆகி விட்டோம் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI
**CC.No.99/2018**

Deposition of witness for Prosecution அ.சா.3

| | | |
|---|---|---|
| பெயர் | : | சத்யா |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | விஜயபாரதி |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 09.02.2026

எதிரிகள் ஆஜர் .

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் புளியாலில் வசித்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 மற்றும் எதிரிகளை தெரியும். பிரச்சனை நடந்த இடத்திற்கு எதிரில் எங்கள் வீடு உள்ளது. அங்கு இரு தரப்பினருக்கும் பிரச்சனை நடக்கும் சத்தம் கேட்டு நான் வந்தேன். 1,2 எதிரிகள் அ.சா.1 ஐ நிமிரவே முடியாத அளவிற்கு அடித்து கொண்டிருந்தார்கள். அப்போது அ.சா.2 வந்தார். தேவிடியா முண்டை இவளை அடித்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று எதிரிகள் இருவரும் அ.சா.1 ஐ அடித்தார்கள். பின்பு அ.சா.2 யும் தரக்குறைவாக பேசி அடித்தார்கள். இருவர் வீட்டாரும் வந்து விலக்கிவிட்டார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

அ.சா.1,அ.சா.2 என் உறவினர்களா என்றால் இல்லை, பக்கத்து வீட்டை சேர்ந்தவர்கள் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள். அ.சா.1 தரப்பினரும் எதிரிகள் தரப்பினரும் பூர்விகமாக அதே ஊரைச் சேந்தவர்கள்தான் என்றால் சரிதான். அவர்களுக்கு இடையே உள்ள சொத்து பிரச்சனை முழு விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கும் எதிரிகள்

தரப்பினருக்கும் இடையே பலமுறை பிரச்சனை ஏற்பட்டு காவல் துறை விசாரணைக்கு ஆஜர் ஆகியுள்ளேன் என்றால் இல்லை. அ.சா.1,அ.சா.2 மீது எதிரிகள் தரப்பில் புகார் கொடுக்கப்பட்டு வழக்கு நடந்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். அ.சா.1,அ.சா.2 ம் தான் 1ம் எதிரியையும் அவருடைய தாயாரையும் தாக்கி காயப்படுத்தினார்கள் என்றும் அ.சா.1 எனக்கு உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, அவர்கள் என் உறவினர் இல்லை. அ.சா.1, அ.சா.2 ஐ எதிரிகள் தாக்கவோ, ஆபாசமாக பேசவோ, கொலைமிரட்டல் செய்யவோ, காலால் மிதிக்கவோ இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.